# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

*ஆண்டின் இதுவரைகாலமும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தேநுவிசு, 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொநுவிசு, 2013=100) ஆகிய இரு நியதிகளிலுமான பொது விலை மட்டம் கலந்த அசைவுகளைக் காண்பித்தது. பொது விலை மட்டத்தின் அசைவானது பாரியளவில் உணவு வகை விலை அசைவுகளுக்கு இசைவாகக் காணப்பட்ட அதேவேளை உணவல்லா வகைகளின் விலைகளின் அசைவும் குறித்த அளவொன்றிற்குப் பங்களிப்புச் செய்தது. ஒட்டுமொத்த உணவு விலைகள் சாதகமான வழங்கல் பக்க அபிவிருத்தியினால் துணையளிக்கப்பட்டு 2018 மே மற்றும் யூன் மாதங்கள் தவிர ஆண்டின் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியின் போது வீழ்ச்சிப்பாதையொன்றைக் காட்டின. மறுபக்கத்தில், உணவல்லா பொருட்களின் விலைகள், பிரதானமாக எரிபொருள், எரிவாயு மற்றும் பேருந்துக் கட்டணங்களின் நிருவகிக்கப்பட்ட விலைகளுக்கான மேல்நோக்கிய சீராக்கங்களின் காரணமாக ஆண்டின் முதல் ஒன்பதுமாதங்களின் போது ஒட்டுமொத்தமாக அதிகரிக்கும் போக்கொன்றினைக் காட்டின. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது முதல் ஒன்பது மாதங்களின் போது பெரும்பாலும் நடு ஒற்றை இலக்க மட்டத்திற்குக் கீழ் விளங்கியது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டுக்கு ஆண்டு அடிப்படைப் பணவீக்கமானது ஆண்டுக்காலப்பகுதியின் போது குறைந்த தளம்பல் மிக்கதாகவிருந்தது. பணவீக்க எதிர்பார்க்கைகள், குறிப்பாக நிறுவனத் துறையினது பெரும்பாலும் உண்மையான பணவீக்கத்திற்கு இசைவாக அமைந்திருந்தது. முறைமைசார்ந்த துறையில் உண்மையான கூலி குறைவொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், முறைசாராத் துறை உண்மைக் கூலி வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2018 முதலரைப் பகுதியின் போது தொழில்நிலைப் பக்கத்தில் தொழிற்படைப் பங்களிப்பு வீதமானது 2017இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்த அதேவேளை தொழிலின்மை வீதம் அதிகரித்தது. தொழிற்படைப் பங்கேற்பு விகிதத்தின் வீழ்ச்சிக்கு தொழிற்படையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் தொழில் செய்யும் வயது குடித்தொகையின் அதிகரிப்பு என்பன காரணமாக அமைந்தன. அரசாங்கம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக தொழில்முயற்சியினையும் தொழில் தொடங்குதல்களையும் ஊக்குவிப்பதற்கு தொடர்ந்தும் வழிமுறைகளை எடுத்தது. எனினும், தேர்ச்சிகள் பொருத்தமின்மை மற்றும் பாலின சமத்துவமின்மை போன்ற பல கட்டமைப்புசார்ந்த குறைபாடுகள் பல வளர்ந்துவரும் துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறைகளைத் தோற்றுவித்துள்ளதுடன் அவைகள் தொழில் சந்தையில் தொடர்ந்தும் நிலவுகின்றன. இலங்கையரின் பிரதான புலம்பெயர் தொழில் அடைவிடங்களில் தற்போது இடம்பெறுகின்ற புவிசார் அரசியல் போக்கொன்றுடனும் வெளிநாட்டுத் தொழிலுக்கான புறப்படுகையின் எண்ணிக்கையின் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு வெளிநாட்டு தொழிலுக்கான வாய்ப்புக்களும் வீழ்ச்சியடைந்தன. அரசாங்கத் துறையில் பல வேலைநிறுத்தங்கள் இடம்பெற்றதுடன் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களின் சமூக வாழ்க்கையின் மீது சில பாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்த அதேவேளை தொழில் திணைக்களத் தரவுகள் தனியார் துறை வேலை நிறுத்தங்களில் வீழ்ச்சியொன்றினைக் காண்பித்தன.*

4

## 2018ஆம் ஆண்டின் அபிவிருத்திகள்

### விலைகள்

#### பொது விலை மட்டத்தின் அசைவுகள்

- **தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் நியதிகளில் அளவிடப்பட்டவாறு பொது விலை மட்டம் 2018 முதல் மூன்று மாதங்களின் போது வீழ்ச்சிப் போக்கொன்றில் நகர்ந்ததுடன் அதன் பின்னர் 2018 ஓகத்து மற்றும் செத்தெம்பரில் வீழ்ச்சியடைவதற்கு முன்னர் 2018 யூலை வரை அதிகரித்தது.** மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் ஒத்த அசைவை ஆய்வுக்குரிய காலப்பகுதியில் கொண்டிருந்தது. பொது விலை மட்டமானது மீளாய்வுக் காலப்பகுதியின் போது பெரும்பாலும் உணவு வகைகளின் விலைகளின் அசைவுகளைப் பின்பற்றியிருந்தது. அதிகரிக்கும் போக்கொன்றின் மீது நகர்ந்த உணவல்லா வகைகளின் விலைகளும் பொது விலை மட்ட அசைவிற்கு பங்களித்தன.

- **தளம்பல் மிக்க உணவு வகைகளின்[1] விலைகளுக்கு மிகவும் இசைந்து காணப்பட்ட உணவு வகைகளின் விலைகள் 2018இன் முதல் நான்கு மாதங்களின் போது வீழ்ச்சிப் போக்கொன்றின் மீது நகர்ந்து 2018 யூன் வரை அதிகரித்து அதன்பின்னர் வீழ்ச்சியடைந்தது.** 2018இன் முதல் நான்கு மாதங்களின் போது தளம்பல் உணவு விலைகளின் வீழ்ச்சிப் போக்கானது தேங்காய் விலைகள், உடன் மீன் மற்றும் உருளைக்கிழங்கு விலைகள் போன்றவற்றில் அவதானிக்கப்பட்ட இடைவிட்டு நிகழும் வீழ்ச்சிக்கு மேலதிகமாக அரிசி, காய்கறி மற்றும் வெங்காய விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளினால் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. அதன் பின்னர், அனேகமான தளம்பல் உணவு வகைளின் அதாவது உடன்மீன், காய்கறிகள், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காய விலைகள் பருவகாலக் காரணிகளினால் தூண்டப்பட்டு குறிப்பாக 2018 மே மற்றும் யூன் காலப்பகுதியின் போது அதிகரித்தன. எவ்வாறாயினும், 2018 யூலையில் அரிசி, தேங்காய் போன்ற வகைகளின் குறிப்பிடத்தக்க விலை வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டது. அரிசி, தேங்காய், உடன் மீன் மற்றும் தேங்காய் மூலம் தூண்டப்பட்டு 2018 ஓகத்து மற்றும் செத்தெம்பரில் தளம்பலடையும் உணவு விலைகள் மேலும் வீழ்ச்சியடைந்தன. 2017/18 பெரும்போகத்தின் போது நெல் உற்பத்தியில் பொருளாதார மீட்சி மற்றும் அரிசி இறக்குமதி என்பவற்றின் விளைவாக 2018 முதல் ஒன்பதுமாத காலப்பகுதியின் போது அனேகமாக அரிசி வகைகளின் விலைகள் மிதமடைந்தது. ஆண்டின் ஆரம்பத்தின் போது குறைந்த மட்டங்களிலிருந்த உடன் மீன் விலைகள் பருவகால காரணிகளின் விளைவாக குறைவான மீன் உற்பத்தியின் காரணமாக ஆண்டின் இரண்டாம் காலப்பகுதியின் போது துரிதமான விதமொன்றில் அதிகரிக்க ஆரம்பித்தன. எனினும், ஆண்டின் மூன்றாம் காலாண்டின் போது மீன் விலைகள் ஓரளவு தளர்வடைந்தன. நீண்ட வறட்சி நிலைமைகளின் மூலம் ஏற்பட்ட தேங்காய் உற்பத்தியின் வீழ்ச்சி காரணமாக அதிகரிக்கும் தேங்காய் விலைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2017 திசெம்பர் தொடக்கம் தேங்காய் உள்ளீட்டு உற்பத்தி இறக்குமதிகளை அரசாங்கம் அனுமதித்தது. மேலும், 2017இன் போது மோசமாகப் பாதிக்கப்பட்ட தேங்காய் உற்பத்தி 2018இன் இரண்டாம் காலாண்டின் போது மீண்டது. அதற்கமைய தேங்காய்களின் விலை 2018 சனவரியில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்து 2018 மாச்சு வரை ஏறக்குறைய அதே மட்டங்களில் நிலவியதுடன் அதன் பின்னர் மேலும் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. காய்கறி விலைகள் 2018 ஏப்பிறல் வரை வீழ்ச்சிப் பாதையொன்றினைத் தொடர்ந்து சென்றதுடன் அதன் பின்னர் 2018 ஓகத்தில் வீழ்ச்சியொன்றினையும் 2018 செத்தெம்பரில் மேலும் வீழ்ச்சியொன்றினையும் பதிவுசெய்வதற்கு முன்னர் அதிகரிக்கும் பாதையொன்றினைத் தொடர்ந்து சென்றது. அதேவேளை, உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயங்களின் விலைகள் மீளாய்வுக் காலப்பகுதியின் போது அதேபோன்ற விதமொன்றினை ஒத்திருந்த அதேவேளை, ஆண்டின் ஆரம்பத்தின் போது வீழ்ச்சியடைந்த சின்ன வெங்காயம் விலை அதன் பின்னர் அதே மட்டங்களில் நிலவி 2018 ஓகத்து மற்றும் செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்தது.

- **உணவு வகைகளினுள் தளம்பல் உணவு தவிர்ந்த வகைகளின் விலைகள் முதல் இரண்டு மாதங்களின் போது தளர்வடைந்து அதன் பின்னர் ஒட்டுமொத்த அதிகரிப்பொன்றினைக் காண்பித்தது.** இவ்வகைகளினுள் பருப்பு மற்றும் சீனி என்பவற்றின் விலைகள் பன்னாட்டுச் சந்தையில் அவற்றின் விலை அசைவுகளுக்கிணங்க நகர்ந்தன. பருப்பின் விலை ஆண்டின் ஆரம்பத்தில் குறைவடைந்ததுடன் 2018 ஓகத்தில் சிறிதளவு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்வதற்கு முன்னர் கிட்டத்தட்ட அதே மட்டங்களில் காணப்பட்ட அதேவேளை சீனி விலை

1 தளம்பல்மிக்க உணவு வகைகள் அரிசி, இறைச்சி, புதிய மீன் மற்றும் கடலுணவு, தெங்கு, புதிய பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட விடயங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

மீளாய்வுக்குட்படும் காலப்பகுதியின் போது 2018 செத்தெம்பரில் அவதானிக்கப்பட்ட சிறிய அதிகரிப்பை தவிர்த்து வீழ்ச்சிப் போக்கொன்றினைப் பின்தொடாந்தது. 2018 மே 5 முதல் நடைமுறைக்கு வரும்வகையில் பால்மா விலை மேல்நோக்கித் திருத்தப்பட்டது. பால்மா, கருவாடு மற்றும் முட்டைகளின் விலைகளில் அவதானிக்கபட்ட அதிகரிப்பு 2018 ஏப்பிறல் முதல் யூலை வரையான காலப்பகுதியின் போது தளம்பல் உணவுகள் தவிர உணவு வகைகளின் விலைகள் மீது மேல்நோக்கிய அழுத்தமொன்றினை ஏற்படுத்தியிருந்தது. கோதுமை மா மற்றும் பாண் என்பவற்றின் விலை 2018 செத்தெம்பர் 01 மற்றும் செத்தெம்பர் 4 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் முறையே ரூ.5 இனால் மேல்நோக்கி திருத்தப்பட்ட அதேவேளை, பால்மா விலை 2018 செத்தெம்பர் 19 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் கீழ்நோக்கித் திருத்தப்பட்டது.

- **2018இன் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியின் போது உணவல்லா மற்றும் ஏனைய பொருட்களின் விலைகள் அதிகரித்த போக்கொன்றின் மீது நகர்ந்தன.** எரிபொருள், எரிவாயு, பஸ் கட்டணங்கள் மற்றும் புகையிரதக் கட்டணங்கள் என்பவற்றுக்காக நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள் இவ்வதிகரிப்புக்குப் பங்களித்தன. திரவ பெற்றோலிய எரிவாயு விலை அதிகரிப்பினைத் தொடர்ந்து உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளில் துணைத் தொகுதியில் தயாரிக்கப்படும் சில உணவுகளின் விலைகளில் அதிகரிப்பொன்று அவதானிப்பட்டது. மேலும், எரிபொருள் விலை அதிகரிப்புகளைத் தொடர்ந்து பேருந்து, புகையிரதம், வாடகை வண்டி/முச்சில்லுவண்டிகள் மற்றும் பாடசாலை வான்கள் போக்குவரத்துக் கட்டணத்தில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வைத்தியசாலை அறைக்கட்டணங்கள் தவிர சுகாதாரக் கவனிப்பு சேவைகள் செலவு 2018 யூலை 02 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பெறுமதிசேர் வரியிலிருந்து நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கவொன்றாகும்.


## நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் மற்றும் முதன்மைப் பணவீக்கம்

### தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்


- **தேசிய மட்டத்தில் நுகர்வோர் பொருட்கள் கூடையின் விலைப் போக்குகளை பிரதிபலிக்கின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2018இன் முதல் மூன்றுமாதங்களின் போது வீழ்ச்சிப் போக்கொன்றினை பின்தொடர்ந்து 2018 ஏப்பிறல் முதல் யூலை வரை அதிகரித்த போக்கில் நகர்ந்து அதன் பின்னர் வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய, 2018 சனவரியில் 125.8 சுட்டெண் புள்ளிகளாகவிருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2018 மாச்சில் 122.8 சுட்டெண் புள்ளிகளாக வீழ்ச்சியடைந்து 2018 யூலையில் 126.6 சுட்டெண் புள்ளிகளாக அதிகரித்து 2018 செத்தெம்பரில் 124.4 சுட்டெண் புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைந்தது. 2018இன் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு உணவல்லா வகையினால் பெரும்பாலும் பங்களிப்புச் செய்யப்பட்ட 2018 ஏப்பிறல், மே மற்றும் யூலை மாதங்களைத் தவிர ஏனைய காலப்பகுதியில் பிரதானமாக உணவு வகைகளினால் தூண்டப்பட்டிருந்தது.

- **தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் போது வீழ்ச்சியடைந்ததுடன் அதன் பின்னர் அதிகரிக்கும் போக்கொன்றினை 2018 யூலை**

வரைபடம் 4.1
தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதத்திற்கு மாத % மாற்றம் (2013=100)




வரைபடம் 4.2
முதன்மை பணவீக்கத்தின் அசைவுகள் தே.நு.வி.க (2013=100)



**வரை தொடர்ந்து அதன் பின்னர் வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய, ஆண்டுக்கு ஆண்டு தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கம், 2018 சனவரியில் 5.4 சதவீதத்திலிருந்து ஏப்பிறலில் 1.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து அதன்பின்னர், 2018 யூலையில் 3.4 சதவீதத்திற்கு அதிகரித்து 2016 சனவரியிலிருந்து அவதானிக்கப்பட்ட மிகக்குறைந்த 0.9 சதவீதத்துக்கு 2018 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, ஆண்டுச் சராசரி தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கம் 2017இன் போது அவதானிக்கப்பட்ட அதன் அதிகரிக்கும் போக்கினை திரும்பச்செய்ததுடன் 2018 சனவரியில் 7.6 சதவீதத்திலிருந்து 2018 செத்தெம்பரில் 4.0 சதவீதமாக ஒட்டுமொத்தமாக குறைவடையும் போக்கொன்றில் நகர்ந்தது.

### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

4

- **கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேச விலை அபிவிருத்திகளை அளவிடுகின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களின் போது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிற்கு ஒத்த போக்கினை எடுத்துகாட்டியது.** 2018 சனவரியில் 122.8 சுட்டெண் புள்ளிகளாகவிருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2018இன் மாச்சில் 121.4 சுட்டெண் புள்ளிகளாக வீழ்ச்சியடைந்ததுடன் அதன்பின்னர் அதிகரித்து 2018இன் செத்தெம்பரில் 124.9 சுட்டெண் புள்ளிகளை பதிவுசெய்தது. மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியின் போது 2018 ஏப்பிறல் மற்றும் ஓகத்து மாதங்கள் தவிர கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு பிரதானமாக உணவு வகைகளின் அசைவுகளினால் தூண்டப்பட்டிருந்தது.

- **ஆண்டுக்கு ஆண்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் 2018 ஏப்பிறல் வரை குறைவடையும் போக்கொன்றின் மீது காணப்பட்டதுடன் அதன் பின்னர் 2018 செத்தெம்பரில் வீழ்ச்சியடைவதற்கு முன்னர் அதிகரித்த போக்கொன்றில் அமைந்திருந்தது.** அதற்கமைய, 2018 சனவரியில் 5.8 சதவீதமாகவிருந்த ஆண்டுக்கு ஆண்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கம் 2018 ஏப்பிறலில் 3.8 சதவீதமாக குறைவடைந்து அதன் பின்னர் 2018 செத்தெம்பரில் 4.3 சதவீதமாக வீழ்ச்சியடைவதற்கு முன்னர் 2018 ஓகத்தில் 5.9 சதவீதமாக படிப்படியாக அதிகரித்தது. அதேவேளை ஆண்டுச் சராசரி கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கமானது 2018 சனவரியில் 6.6 சதவீதத்திலிருந்து 2018 செத்தெம்பரில் 5.4 சதவீதமாக வீழ்ச்சிப் போக்கொன்றினை பின்தொடர்ந்தது.

### மையப் பணவீக்கம்

- **தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கம் அவதானிக்கப்பட்ட காலப்பகுதியின் நிலையான மட்டங்களில் காணப்பட்டது.** அதற்கமைய, ஆண்டுக்கு ஆண்டு தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மையப் பணவீக்கமானது 2018 சனவரியில் 2.1 சதவீதத்திலிருந்து 2018 மேயில் 1.7 சதவீதமாக 2018இன் முதல் ஐந்து மாதங்களின் போது குறைவடைகின்ற போக்கொன்றில் நகர்ந்தது. எனினும், அதன்பின்னர் இப்போக்கு பழைய நிலைமைக்கு திரும்பியதுடன் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மையப் பணவீக்கம் அதிகரித்து 2018இன் செத்தெம்பரில் 3.1 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. அதேவேளை அவதானிக்கப்பட்ட காலப்பகுதியின் போது கலந்த அசைவுகளைக் காண்பித்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மையப் பணவீக்கம் 2018இன் சனவரியில் 3.5 சதவீதமாகவிருந்து 2018 செத்தெம்பரில் 3.8 சதவீதத்தினைப் பதிவுசெய்வதை நோக்கி நகர்ந்தது.

### உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்

- **பொருட்கள் மற்றும் சேவைகளின் உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற விலைகளிலுள்ள மாற்றத்தினை அளவிடுகின்ற தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்படும் உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (உவிசு 2013 கா4=100) 2018இன் முதல் எட்டுமாதங்களின் போது கலப்பான அசைவுகளை பின்பற்றியிருந்தது.** அனைத்துத் துணைத் துறைகளிலும் அதாவது, வேளாண்மை, தயாரித்தல், மின்வலு மற்றும் நீர் வழங்கல் துறைகளிலும் உற்பத்தியாளர் விலைகள், அவதானிக்கப்பட்ட காலப்பகுதியின் போது கலந்த அசைவுகளுடன் பொதுவாக அதிகரித்தன. அதேவேளை, உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு, உற்பத்தியாளர் விலைப் பணவீக்கமானது வேளாண்மை துணைத் துறையில் அவதானிக்கப்பட்ட உற்பத்தியாளர் விலைப் பணவீக்கத்தின் போக்கினை அனேகமாகப் பின்தொடர்ந்து 2018 மாச்சு மற்றும் யூலை தவிர 2018இன் முதல் எட்டு மாதங்களின் போது வீழ்ச்சியடைந்த போக்கொன்றினைக் காண்பித்தது.

### விலைகள் மீதான இறைக் கொள்கை வழிமுறைகளின் தாக்கம்


- **மீளாய்வுக் காலப்பகுதியின் போது எடுக்கப்பட்ட பல்வேறு இறைக் கொள்கை வழிமுறைகள் பொது விலை மட்டத்தின் மீது நேரடியான தாக்கமொன்றினைக்**

**கொண்டிருந்தன.** உயர்வடைகின்ற உள்நாட்டு விலைகளைத் தடுப்பதற்கு அரிசி மற்றும் தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கான தீர்மானம் விலை மட்டத்தின் மீது சாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருந்தது. பருவகாலமற்ற காலப்பகுதியின் போது மேல்நோக்கித் திருத்தப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் போன்ற சில இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பண்டத் தீர்வை குறைவான நிரம்பல் காரணமாக விலைகளை அதிகரித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 2018 மே 11 முதல் நடைமுறைக்குவரும் விதத்தில் எரிபொருள் விலைகளுக்கான செலவுப் பிரதிபலிப்பு சூத்திரத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானமானது பணவீக்க அழுத்தம் குறைவாகக் காணப்பட்ட காலப்பகுதியின் போது எடுக்கப்பட்ட உரிய கால தீர்மானமாக அமைந்திருந்தது.

### பணவீக்க எதிர்பார்க்கைகள்

- **நிறுவனத் துறையின் பணவீக்க எதிர்பார்க்கைகள் 2018 சனவரி முதல் 2018 யூலை வரை அதன் போக்கினை அது திரும்பலடையச் செய்யும் வரை குறைவடைந்தது.** 2018இன் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியின் போது அவதானிக்கப்பட்ட எதிர்பார்க்கைகளில் காணப்பட்ட போக்கானது அலுவல்சார் விலைச் சுட்டெண்கள் மூலம் பிரதிபலிக்கப்பட்ட உண்மைப் பணவீக்கத்தின் போக்கிற்கு இசைவாகக் காணப்பட்டது. அண்மைக்கால எரிபொருள் விலை உயர்வுகள் மற்றும் உள்நாட்டு நாணயம் தேய்வடைதல் என்பனவற்றின் ஊடறுத்துச் செல்லும் தாக்கங்கள் நிறுவனத் துறையின் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்தினைத் தூண்டின. அதேவேளை, நிறுவனத் துறையினைவிட இயல்பாகவே உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்ற வீட்டலகுத் துறையின் பணவீக்க எதிர்பார்க்கைகள் 2018 மே தொடக்கம் ஓகத்து வரையான எதிர்பார்க்கைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சியினைத் தொடர்ந்து 2018 செத்தெம்பரில் அதிகரித்தது. உள்நாட்டு வழங்கல் பக்க நிலைமைகள் மற்றும் எரிபொருள் விலை உயர்வுகள் என்பன அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்திற்கான பிரதான காரணங்களாக எடுத்துக் கூறப்பட்டிருந்தன.

வரைபடம் 4.3
கம்பனித்துறையின் பணவீக்க எதிர்பார்க்கைகள்




### கூலிகள்


- **பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண் மூலம் (2012=100) அளவிடப்பட்டவாறு தளர்ந்த அடிப்படையொன்றில் அடிப்படைச் சம்பளத்திற்கு இடைக்காலக் கொடுப்பனவினை உள்ளடக்குவதன் காரணமாக அரசாங்கத் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2018இன் முதல் எட்டு மாதங்களில் 0.1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.** எனினும், அதேகாலப் பகுதியின் போது 2.7 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி குறைவொன்றினை அரசாங்கத் துறை ஊழியர்கள் அனுபவித்தனர். அரசாங்கத் துறையில் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு 2018 ஓகத்து 20 அன்று 15 உறுப்பினர்களைக் கொண்ட விசேட சம்பள ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

- **கூலி நிர்ணய சபைகளினால் ஆளப்படுகின்ற ஊழியர்களின் சம்பளங்களின் குறைந்தபட்ச சம்பள வீதச் சுட்டெண் (1978 திசெம்பர் = 100) மூலம் அளவிடப்பட்டவாறு முறை சார்ந்த தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவிலான கூலிகள் 2018இன் முதல் எட்டு மாதங்களில் 0.1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.** இதற்கு 2018 ஓகத்தில் அச்சிடல், புடவை, டயர் மற்றும் டியூப் தயாரித்தல் அத்துடன் ஆடை தயாரிப்பு வர்த்தகங்களில் குறைந்தபட்ச கூலிகளின் அதிகரிப்பு பிரதான காரணமாக அமைந்திருந்தது. காலப்பகுதியின் போது பெயரளவுக் கூலிவீதச் சுட்டெண்ணின் சதவீத அதிகரிப்பு சிறிதளவாக அதிகரித்திருந்தமையால் முறைசார்ந்த தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள், அதேகாலப்பகுதியின் போது 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

- **முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2012=100) மூலம் அளவிடப்பட்டவாறு முறைசாரா துறையின் கூலிகள் அநேகமாக தொழில் கேள்வி மற்றும் வழங்கல் நிலைமை என்பவற்றின் அடிப்படையில் நிருணயிக்கப்படுவதினால் முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவிலான கூலிகள் 2018இன் முதல்**

4

வரைபடம் 4.4
உண்மைக் கூலிவீதச் சுட்டெண்களின் ஆண்டுச்சராசரி மாற்றம்




**எட்டுமாதங்களின் போது 13.3 சதவீதமொன்றினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.** அதேவேளை முறைசாரா துறையின் உண்மைக் கூலிகளும் 2018இன் முதல் எட்டுமாதங்களின் போது 10.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. கொத்தனார் மற்றும் தச்சுத் தொழில் கூலிகள் தொடர்புடைய தொழில்களில் அதிகரித்த தொழிலாளர் கேள்வியின் காரணமாக அவதானிக்கப்பட்ட காலப்பகுதியின் போது கூலிகளின் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

## தொழிற்படையும் தொழில்நிலையும்

- **தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களுக்கமைய தொழில்செய்யும் வயதுக் குடித்தொகையானது[2] தொழில் சந்தையில் விடாப்பிடியான கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகள் காரணமாக தொழிற்படைக்கான அதன் உற்பத்திறன்வாய்ந்த பங்களிப்பு சாத்தியமாக குறைந்த மட்டத்தில் நிலவிய போதிலும் 2018இன் முதலரைப் பகுதியில் அதிகரித்தது**. தொழிற்படைப் பங்கேற்பு வீதம் மீளாய்வுக் காலப்பகுதியின் போது 51.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை 2017இன் போது உத்வேகம் பெற்றிருந்த பெண் தொழிற்படை பங்கேற்பு வீதம் 33.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை ஒட்டுமொத்த தொழிலின்மை வீதம் 4.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. தொழிலாளருக்கான கேள்வி குறிப்பிடத்தக்களவு உயர்வாகக் காணப்பட்ட போதிலும் இளையோர், கல்வித் தகைமை பெற்றோர் மற்றும் பெண்கள் மத்தியில் தொழிலின்மையானது மேம்படுத்தலுக்கான எவ்வித அறிகுறிகளுமின்றி உயர் மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. தொழிலாளர் கேள்வி மற்றும் நிரம்பலில் பொருத்தமின்மை என்பன மந்தமான மனித மூலதன அபிவிருத்திச் செயன்முறை மற்றும் மாற்றமடைந்துவரும் தொழிற்சந்தைத் தேவைப்பாடுகள் என்பவற்றுக்கிடையிலான இசைவின்மை பெறுபேறொன்றாக விளங்குகின்றது என்ற உண்மைமீது தொழில்தருநர்கள் தொடர்ந்தும் அழுத்தம் தெரிவித்தனர். தொழிற் சந்தைக் குறிகாட்டிகள் மூலம் எடுத்துக்காட்டப்பட்ட அண்மைக்கால இசைவின்மையானது அசைவுகள் கடந்த காலத்தில் பாதகமான வானிலையினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பாரியளவிலான முறைசாராத் துறை மற்றும் குறுகிய தொழில் காலச்சுழற்சிகள், உயர் தொழிலாளர் புரள்வு மற்றும் சுயவிருப்பத் தொழிலின்மை போன்ற நவீன கால தொழில் இயக்கவாற்றல் என்பவற்றிற்குச் சாட்டப்படக்கூடியதாகும்.

## தொழிற்படை

- **தொழில் செய்கின்ற வயது வீட்டலகுக் குடித்தொகையில் 2.8 சதவீத அதிகரிப்பொன்றுக்கு மத்தியிலும் 2018இன் முதலரைப் பகுதியில் தொழிற்படையானது 2017இன் தொடர்புடைய காலப்பகுதியின் 8.551 மில்லியனிலிருந்து 8.343 மில்லியன் ஆட்களாக 2.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** தொழிற்படையானது 15 வயது மற்றும் அதற்குக்கூடிய வயதுடைய பொருளாதார ரீதியாக செயற்பாடுடைய குடித்தொகையினை உள்ளடக்குகின்றது. தொழிற்படையில் வீழ்ச்சியானது பெண்கள், குறிப்பாக கிராமியத் துறையில் உள்ளவர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்கதாகவிருந்தது. அதேவேளை, 2018இன் முதலரைப் பகுதியின் போது தொழில் செய்கின்ற வயது வீட்டலகு குடித்தொகையின் பாகமொன்றினைத் தோற்றுவிக்கின்ற பொருளாதார ரீதியாக செயற்பாடற்ற குடித்தொகை முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9.0 சதவீதத்தினால் அதிகரித்தது. பொருளாதார ரீதியாக செயற்பாடற்ற குடித்தொகையில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பானது பிரதானமாக ஆரம்பத்தில் வேளாண்மைத் துறையினைப் பாதித்து பின்னர் கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளினுள் சென்றடைந்த பல பயிர்ச்செய்கைப் பருவகாலங்கள் முழுவதும் இடம்பெற்ற வானிலையுடன் தொடர்புபட்ட இடைத்தடங்கல்களினால் ஏற்பட்டிருந்தது. மேலும், 2017 மற்றும் 2018 காலப்பகுதியின் போது முன்னோடிச் செயற்றிட்டமொன்றாக நடாத்தப்பட்ட 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம் கற்கைகளின் ஈடுபாடு காரணமாக இளையோர் மத்தியில் பொருளாதார செயற்பாடின்மையை தோற்றுவித்துள்ளது என ஊகிக்கப்படுகின்றது.

2 தொழில்புரியும் வயது குடித்தொகையானது வயது 15 வருடங்கள் மற்றும் அதற்கு மேலான பொருளாதார ரீதியில் செயற்படுகின்ற குடித்தொகையினர் (தொழிற்படை) மற்றும் பொருளாதார ரீதியில் செயற்படாத குடித்தொகையினர் ஆகிய இருவரையும் உள்ளடக்குகின்றது.

- **2018இன் முதலரைப்பகுதியில், தொழில்செய்யும் வயதுக் குடித்தொகைக்கான தொழிற்படை விகிதமான தொழிற்படைப் பங்கேற்பு வீதமானது 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 54.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் தொழில்செய்யும் வயது குடித்தொகையில் அதிகரிப்புக்கு மத்தியிலும் தொழிற்படையின் வீழ்ச்சியின் விளைவின் காரணமாக 51.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.** கடந்த வருடத்தின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியின் பெண் மற்றும் ஆண் இரண்டினதும் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் இவ்வபிவிருத்திக்குப் பங்களித்தது. 2018இன் முதலரைப்பகுதியில் ஆண் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 73.0 சதவீதமாகவும் பெண் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 33.0 சதவீதமாகவும் இருந்தது. பெண்கள் மூலமான செயற்பாடுமிக்க பொருளாதாரப் பங்களிப்பு சாத்தியத்தன்மைக்கு இன்னும் கீழே காணப்படுவதனால் பெண் தொழிற்படையினை அதிகரித்தல் பொருளாதாரத்தின் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறைக்கான நிலைபெறத்தக்க தீர்வொன்றாக இயல்பாகவே தோற்றம் பெறும். இது அதிகரித்த வீட்டலகு வருமான மட்டங்களுக்கு இட்டுச் செல்வதுடன் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்துடன் பொருளாதாரத்தில் விரும்பப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தினையும் வசதிப்படுத்தும்.

## தொழில்நிலை

- **2018இன் முதலரைப்பகுதியில் பொருளாதாரத்தில் நிறைவு செய்யப்பட்ட தொழில் கேள்வியினைப் பிரதிபலிக்கின்ற தொழில்பெற்றோர் எண்ணிக்கை 2017இன் தொடர்புடைய காலப்பகுதியின் போதான 8.184 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.966 மில்லியனாக 2.7 சதவீதத்தினால் குறைவடைந்தது.** துறைசார் தொழில் தொடர்பில், பணிகள் துறையானது மொத்த தொழிலின் 46.8 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற முன்னணித் தொழில் உருவாக்குநராக தொடர்ந்தும் விளங்கியது. வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகள் 2018இன் முதலரைப் பகுதியின் போது மொத்தத் தொழிலின் முறையே 25.5 சதவீதம் மற்றும் 27.7 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. தொழில்பெற்றோர் எண்ணிக்கையில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியானது பிரதானமாக கடந்த காலங்களில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளுக்கு சாட்டத்தக்கதாகும். 2018இன் முதலரைப்பகுதியில் மோசமான வானிலை நிலைமைகளினால் நேரடியாக பாதிக்கப்பட்டிருந்த வேளாண்மைத் துறையில் தொழில்பெற்றோர் எண்ணிக்கை 2017இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 6.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. வானிலை இடைத்தடங்கல்களின் நேரடியற்ற தாக்கம் ஏனைய துறைகளுக்கும் விசேடமாக வேளாண்மை உள்ளீடுகளில் பிரதானமாக சார்ந்திருக்கின்ற அல்லது வேளாணமை நடவடிக்கைகளில் நேரடியாக இணையப்பெற்றவை மீதும் ஊடுகடத்தப்பட்டன.

- **2018இன் முதலரைப்பகுதியின் போது தொழில்நிலை தகைமை என்ற நியதிகளின் அரசாங்கத் துறை தவிர்ந்த அனைத்துத் துறைகளினதும் தொழில் பெற்றோர் எண்ணிக்கை குறைவடைந்தது.** 2018இன் முதலரைப்பகுதியின் போது அரசாங்கத் துறை தொழில்நிலை முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9,590 ஆட்களினால் அதிகரித்தது. முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் படி அரசாங்கத்துறையிலுள்ள

4

அட்டவணை 4.1

தொழிற்படை, தொழில் நிலை மற்றும் தொழிலின்மை (அ)

| விடயம் | 2017 முதலாம் அரையாண்டு | 2017 ஆண்டு | 2018 முதலாம் அரையாண்டு | 2018 எறிவுகள் (வருடாந்தம்) |
|---|---|---|---|---|
| குடும்ப அலகுகளின் குடித்தொகை '000 (15 வயதும் அதற்கு மேலும்) | 15,749 | 15,844 | 16,191 | 16,088 |
| தொழிற்படை, '000 | 8,551 | 8,567 | 8,343 | 8,736 |
| தொழிலிலுள்ளோர் ' 000 | 8,184 | 8,208 | 7,966 | 8,343 |
| தொழிலற்றோர் ' 000 | 367 | 359 | 377 | 393 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (குடும்ப அலகுகளின் குடித்தொகையின் % மாக) | 54.3 | 54.1 | 51.5 | 54.3 |
| தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் % மாக) | 4.3 | 4.2 | 4.5 | 4.5 |

(அ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 2018இன் முதலரைப் பகுதியின் இறுதியில் 1,370,885 ஆக இருந்தது. அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவிடும் அலகுகள் மற்றும் அரசுக்குரித்தான தொழில்முயற்சிகள் என்பவற்றை அரசாங்கத் துறை நிறுவனங்கள் உள்ளடக்குகின்றது.

## தொழிலின்மை

- **2018இன் முதலரையாண்டின் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியின் 4.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.** மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் மொத்த தொழிலற்றோர் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் 366,734 பேருடன் ஒப்பிடுகையில் 376,984 பேராக மதிப்பிடப்பட்டது. ஆண்களின் தொழிலின்மை வீதம் 2.9 சதவீதத்திலிருந்து 3.0 சதவீதத்துக்குப் சிறிதளவு அதிகரித்ததுடன் பெண்களின் தொழிலின்மை வீதம் 6.8 சதவீதத்திலிருந்து 7.4 சதவீதத்துக்கு அதிகரித்தது. தொழில் நிலையின் வீழ்ச்சியானது ஆண்களின் தொழிற்படையினைவிட பொருளாதாரத்தில் பெண்களின் தொழிற்படையில் பாரியளவு உணரப்பட்டது என்பதை இது பிரதிபலித்தது. தொழில் சந்தையிலுள்ள பாலின அடிப்படையிலான சமத்துவமின்மையானது தெட்டத்தெளிவானது என்பதனையும் பெண்களின் தொழிற்படையினை பாதிப்படையச் செய்கின்றது என்பதுடன் பொருளாதாரத்தின் மாற்றங்களுக்கு மிகவும் உணர்வுமிக்கது என்ற உண்மையினை இப்போக்குகள் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றன.


- **2018இன் முதலரைப்பகுதியில் 40 வயதுக்குக் கீழான அனைத்து வயது வகுப்பினரினதும் தொழிலின்மை வீதங்கள் அதிகரித்துள்ளது.** 2018இன் முதலரையாண்டில் இளையோர்[3] தொழிலின்மை கணிசமமான உயர்மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் 22.1 சதவீதத்தையடைந்தது. மறுபுறம், 30 - 39 வயது மற்றும் 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோர் வகுப்பு ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாக முறையே 3.3 சதவீதம் மற்றும் 0.7 சதவீத தொழிலின்மையைப் பதிவுசெய்தது.

3 15 - 24 வருடங்கள் வயதுடையோர்

4

வரைபடம் 4.5

தொழிற்சந்தையின் நிழற்படம் - 2018இன் முதலரை (அ)




(அ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2018இன் முதலரையாண்டில் 40 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்டோர் வயது வகுப்பின் தொழிலின்மை வீதமானது முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது. உயர்வயதினர் வகுப்புகளின் உயர் வேலைவாய்ப்புத் திறனுக்கான முக்கிய காரணங்களாக தொழில்தேடுபவர்களின் தொழில் தொடர்பான ஆற்றல்கள் மற்றும் பணி அனுபவங்கள் என்பன காணப்படுகின்றன. இளையோர் மத்தியில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த தொழிலின்மையானது மனித மூலதனத்தின் மிக உற்பத்தித்திறன் வாய்ந்த வகுப்பினரின் பயன்பாடு போதுமானதாகவில்லாமை என்ற அறிகுறி காணப்படுகின்றது. மறுபக்கத்தில், தொழிலற்ற இளையோருக்காக சாத்தியமாக கீழ் உழைப்பிற்கு அந்தஸ்தொன்றுடன் கூடியவர்களுக்கு வழங்குவதற்கு ஓய்வு வயதின் பின்னரும்கூட தொழில்பெற்றிருக்க வேண்டியவர்களாக உயர்வயது வகுப்பினர் வேண்டப்படுவதனால் அவர்களுக்கு இது மேலதிகச் சுமையொன்றினை ஏற்படுத்துகின்றது. இது உயர் வயது வகுப்புகளின் வாழ்க்கைத் தரத்தைக் குறைக்கவும் மற்றும் தீவிர சமூகப் பிரச்சனைகளை உருவாக்கவும் கூடியது.

- **கல்வி மட்டத்தை பொறுத்தவரை உயர் தொழிலின்மை வீதம் உயர் கல்வியுடையோர் மத்தியில் அறிக்கையிடப்பட்டிருந்தது.** அதற்கிணங்க, 2018இன் முதலரையாண்டில் க.பொ.த. உயர்தர மற்றும் உயர் கல்வியுடையோர் மத்தியில் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 8.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 9.2 தவீதமாகக் காணப்பட்டது. கல்வித்தகைமை பெற்றவர்களுக்கு மத்தியில் உயர் தொழிலின்மையானது தொழில் சந்தையில் தேர்ச்சி இடைவெளிகளுக்கு முக்கிய காரணமாக கூறக்கூடியதாகும். கல்வித்தகைமை பெற்றவர்களுக்கு மத்தியில் உயர்வான தொழிலின்மையானது, கீழ் உழைப்பிற்கு வழிவகுக்கக்கூயது இதன் விளைவாக, கல்வி கற்ற இளையோருக்கு மத்தியில் குறைவான சம்பளங்கள்/ நலன்கள் மற்றும் தொழில் திருப்தியின்மை போன்றவற்றை விளைவிக்கக்கூடியது.


## வெளிநாட்டுத் தொழில்நிலை

- **வெளிநாட்டுத் தொழிலுக்கான ஒட்டுமொத்த புறப்படுகைகள் 2018இன் முதலரைப் பகுதியில் பெண்கள் புறப்படுகைகளின் அதிகரிப்புக்கு மத்தியில் 2.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** கடந்த காலங்களில் அவதானிக்கப்பட்ட வெளிநாட்டுத் தொழிலுக்கான மொத்தப் புறப்படுகைகளில் வீழ்ச்சிப் போக்கானது பிரதானமாக தேர்ச்சியற்ற தொழிலாளர் புறப்படுகையினைக் குறைப்பதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் காரணமாக அமைந்திருந்தன. மேலும், வெளிநாட்டு தொழிலாளர்களை மட்டுப்படுத்துவதற்கு மத்திய கிழக்கு நாடுகள் போன்ற முக்கிய புலம்பெயர் தொழிலாளர் அடைவிடங்களில் வளர்ந்துவரும் தேசியக் கொள்கைகள் மற்றும் வளர்ச்சியடைந்துவரும் துறைகளில் தொழில் பற்றாக்குறைகளின் விளைவாக உள்நாட்டு தொழில் சந்தையிலிருந்தான அதிகரிக்கப்பட்ட கேள்வி என்பனவும் இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன. 2018இன் முதலரைப்பகுதியில் ஆண்களின் புறப்படுகைகள் மற்றும் பெண்களின் புறப்படுகைகள் என்பன மொத்தப் புறப்படுகைகளின் முறையே 62.0 சதவீதம் மற்றும் 38.0 சதவீதத்திற்கு வகைகூறின. 2018இன் முதலரைப்பகுதியில் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்கள் புறப்படுகைகள் 8.3 சதவீதத்தினால் குறைவடைந்ததுடன் பெண்கள் புறப்படுகைகள் 8.8 சதவீதத்தினால் அதிகரித்தன. 2017இன் முதல் காலாண்டிலிருந்து பெண்கள் புறப்படுகைகள் தொடர்ந்தும் அதிகரிக்கும் போக்கொன்றினைக் காண்பித்தன.

- **2018இன் முதலரைப்பகுதியில் தேர்ச்சி பெறாத தொழிலாளர்களும் வீட்டுப் பணிப்பெண்களும் வெளிநாட்டுத் தொழிலுக்கான மொத்தப் புறப்படுகையின் 55 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.** தொழில்சார், நடுத்தரமட்ட, எழுதுவினைஞர் மற்றும் தொடர்புடைய மற்றும் வீட்டுப் பணிப்பெண் வகைகளின் கீழ் பணியாளர் புறப்படுகைகள் அதிகரித்த அதேவேளை தேர்ச்சிபெற்ற, ஓரளவு தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிபெறாத வகைகளின் கீழ் பணியாளர் புறப்படுகைகள் முன்னைய

வரைபடம் 4.6

தேர்ச்சி அடிப்படையில் வெளிநாட்டுத் தொழில் நிலைக்கான வெளிச்செல்கைககள் (ஆண்டின் முதலரை)




*மூலங்கள்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

4

ஆண்டுடன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியில் வீழ்ச்சியொன்றினைக் காண்பித்தன. 2018இன் முதலரைப்பகுதியின் போது 79 சதவீத கணிசமான பெண் புலம்பெயர் பணியாளர்கள் வீட்டுப் பணிப்பெண் தொழில்வாய்ப்புக்களை நாடியிருந்தனர். 2018இன் முதலரைப்பகுதியின் போது வீட்டுப் பணிப்பெண்கள் வகையின் கீழ் புறப்படுகைகள் முன்னைய ஆண்டின் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 11 சதவீத அதிகரிப்பொன்றைக் காண்பித்து 31,062இனை எய்தியது. பாதுகாப்பான மற்றும் தேர்ச்சிபெற்ற புலம்பெயர்வினை உறுதிசெய்வதற்கு நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளின் நீண்டகால செயல்திறன் தன்மையினை மதிப்பிடுகின்ற தேவையினை இது சமிஞ்சைப்படுத்துகின்றது. தொழிலாளர் பணவனுப்பலின் மீது கணிசமானளவு பொருளாதாரம் சார்ந்திருப்பதனால் உயர்திறன்பெற்ற வகைகளின் கீழ் புறப்படுகைகளை ஊக்குவிப்பதற்கான கொள்கை நடைமுறைப்படுத்தலானது எதிர்காலத்தில் வெளிநாட்டுப் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்களில் நிலைபெறத்தக்க வளர்ச்சியினை உறுதிசெய்வதற்கு மேலும் வலுப்படுத்தப்படவேண்டியுள்ளது. 2018இன் முதலரைப்பகுதியின் தொழில்சார் மற்றும் நடுத்தரமட்ட வகைகள் மொத்த புறப்படுகைகளில் கிட்டத்தட்ட 7 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறின.

4

## தொழிலாளர் உறவுகள்

- **அரசாங்கத் துறையில் நிகழ்ந்த பல வேலைநிறுத்தங்கள் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளையும் பொதுவாக சமூகத்தினையும் இடைத்தடங்கலுக்குள்ளாக்கியது.** நல, கல்வி, அஞ்சல் மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளின் 2018இன் முதல் எட்டுமாதங்களின் போது அரசாங்கத் துறையில் ஏழு வேலைநிறுத்தங்கள் இடம்பெற்றன என ஊடக அறிக்கைகள் வெளியிடுகின்றன. இவை, பொதுமக்களின் நாளாந்த வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்மொன்றினைக் கொண்டிருந்ததுடன் நாட்டின் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளைத் தடைப்படுத்தியது. எனினும், வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை, ஈடுபட்ட தொழிலாளர்கள் மற்றும் வேலைநிறுத்தம் காரணமாக இழந்த மனிதநாட்கள் என்ற நியதிகளில் தனியார் தொழில்துறைகளின் வேலைநிறுத்தங்களில் வீழ்ச்சியொன்றினை தொழில் திணைக்களத் தரவுகள் பிரதிபலிக்கின்றன. 2018இன் முதலரைப்பகுதியில் இழந்த மனிதநாட்களின் எண்ணிக்கையானது பெருந்தோட்டத்துறை தவிர துறைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியின் பிரதான விளைவாக 2017இன் தொடர்பான காலப்பகுதியில் 33,353 உடன் ஒப்பிடுகையில் 18,840 ஆக 43 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மீளாய்வுக் காலப்பகுதியின் போது வேலைநிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்கள் முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியின் 6,855 தொழிலாளர்களுடன் ஒப்பிடுகையில் 3,573 ஆக வீழ்ச்சியடைந்தது. எனினும், பெருந்தோட்டத் துறையானது 8,879 மனிதநாள் இழப்பொன்றினை துறைக்கு தோற்றுவிக்கின்ற 9 வேலைநிறுத்தங்களில் ஈடுபட்ட 1,177 தொழிலாளர்களுடன் 2018இன் முதலரைப்பகுதியின் போது தொழில் உறவுகள் சிறிய சீர்குலைவொன்றினை அனுபவித்தது. இது, 2017இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில கிட்டத்தட்ட 2.5 மடங்கு உயர்வானதாகும்.

- **நாட்டின் இறுக்கமான மற்றும் குறைவான நெகிழ்வுமிக்க தொழிலாளர் சட்டங்களிலிருந்து தோன்றுகின்ற நீண்டகாலமாக நீடிக்கின்ற தொழில்சந்தைப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு 2018இன் முதலரைப்பகுதியில் தொழில் மற்றும் தொழில்சங்க உறவுகள் அமைச்சு பல வழிமுறைகளை எடுத்துள்ளது.** தனியார் துறையில் தொழில் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் தற்போது காணப்படுகின்ற தொழில்சட்டங்கள் மத்தியில் முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகளுடன் தொடர்புபட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு “தனித் தொழில் சட்டம்” ஒன்றினை அறிமுகப்படுத்தவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தொழில் இடங்களில் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கும் நெகிழ்வுமிக்க பணியாற்று ஒழுங்குகளுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கும் பாரபட்சமின்றி முழுமையான மற்றும் உற்பத்தித் திறன்வாய்ந்த தொழிலினை உறுதிசெய்வதற்காக முன்மொழியப்பட்ட சட்ட வாக்கங்களினுள் ஏற்பாடுகள் உள்ளடக்கப்படவுள்ளன. மகப்பேற்றின் பின்னர் தொழிற்படையில் இணைவதற்கு பெண்களை ஊக்குவிக்கும் நோக்குடன் மகப்பேற்று நன்மைகளை வழங்குவதற்கு 1939இன் 32ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டத்திற்கும் 1954இன் 19ஆம் இலக்க கடை மற்றும் காரியாலய ஊழியர்கள் சட்டத்திற்கும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பன்னாட்டுச் சந்தைக்கு ஒழுக்கமிக்க உற்பத்திகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்ற நாடொன்றாக இலங்கையினை நிலைநிறுத்தும் நோக்குடன் கட்டாயப்படுத்தப்பட்ட தொழிலினைத் தடுத்தல் மற்றும் இல்லாதொழித்தல் மற்றும் ஆபத்தான தொழில் அட்டவணையினைத் திருத்துதல் என்பவற்றுக்கான

வழிமுறைகள் எடுக்கப்பட்டன. மேலும், தொழில்துறை ஐக்கியத்தினை அதிகரிக்கும் நோக்குடன் தொழில் திணைக்களமானது பேச்சுவார்த்தை ஊடாக தொழில் பிணக்குகளை குறைக்கும் அதேவேளை உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு "சமூகக் கலந்துரையாடல் தளம்" ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

### தொழிலாளர் உற்பத்தித்திறன்

- **2018இன் முதல் காலாண்டில் பணியாற்றிய மணித்தியாலம் ஒன்றுக்கு சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதி (2010 விலைகளில்) நியதிகளில் அளவிடப்பட்ட தொழில் உற்பத்தித்திறனானது 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.445.28 உடன் ஒப்பிடுகையில் 6.0 சதவீதத்தால் அதிகரித்து பணியாற்றப்பட்ட மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ.472.14 ஐ அடைந்தது.** அனைத்து மூன்று துறைகளும் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் தொழில் உற்பத்தித்திறனில் சாதகமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. பணிகள் துறையானது பணியாற்றப்பட்ட மணித்தியாலமொன்றுக்கு ரூ.566.05 கொண்ட அதியுயர்ந்த உற்பத்தித்திறனைப் பதிவுசெய்து தொழில் வளங்களின் மிக வினைத்திறன்மிக்க பயன்பாட்டினை காண்பித்ததுடன் பணியாற்றப்பட்ட மணித்தியாலமொன்றுக்கு ரூ.556.29 கொண்ட உற்பத்தித்திறன் மட்டமொன்றுடன் கைத்தொழில் துறை அதற்கு மிக அண்மித்திருந்தது. 2018இன் முதல் காலாண்டின் போது ஒட்டுமொத்த தொழில் உற்பத்தித்திறனின் அதிகரிப்பானது முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதியில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் பணியாற்றப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை வீழ்ச்சி ஆகிய இரண்டின் மூலமும் பங்களிக்கப்பட்டிருந்தது. கடந்தகாலத்தில் அவதானிக்கப்பட்ட போக்காக தொடர்ந்தும் 2018இன் முதல் காலாண்டின் போது பணியாற்றப்பட்ட மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ.155.48 கொண்ட குறைவான உற்பத்தித் திறனை வேளாண்மைத் துறை பதிவுசெய்தது.

### எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

#### விலைகள்

- **2018இன் எஞ்சிய காலப்பகுதியில் பணவீக்கமானது கிட்டத்தட்ட நடு ஒற்றை இலக்க மட்டத்தில் தரித்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.** நன்கு நிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் நாணய முகாமைத்துவம் தொடர்பாக முன்னோக்கிய அணுகுமுறை, சாதகமான உள்நாட்டு நிரம்பல் நிலைமைகள் ஆகியன பொதுவான விலை மட்டத்தை அனுகூலமான நிலைகளில் வைத்திருக்க உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், அத்தகைய சாதகமான விளைவுகளுக்கு எதிராக விலைகளுக்கு பல்வேறு காரணிகளிலிருந்து தோன்றுகின்ற விலைகள் மீது குறித்தமட்டத்திற்கு மேல்நோக்கிய அழுத்தம் காணப்படலாம். எரிபொருள், திரவப்பெற்றோலிய வாயு, மின்சார கட்டணங்கள் போன்ற உணவல்லாத வகைகளுக்கு நிருவகிக்கப்பட்டும் விலைத் திருத்தங்களின் மேல்நோக்கிய அதிகரிப்பு, அமெரிக்க டொலர் பலப்படுத்துவதன் நிமித்தமாக உள்நாட்டு நாணயம் பலவீனமடைவதிலிருந்து தோன்றுகின்ற இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை அசைவுகள் ஏற்படுத்துகின்ற பணவீக்க அழுத்தல்கள் நுகர்வுப் பொருட்களின் சர்வதேச விலைகளில் சரிவுப்போக்கின் சாத்தியமான திரும்புகை என்பன அத்தகைய காரணிகளாகும்.

- **சில பருவகாலங்களின் போது தளம்பல் மிக்க உணவுப் பண்டங்களாகிய மரக்கறிகளின் அதிகமான நிரம்பலானது சந்தையில் அவற்றுக்கு மிக்க குறைந்த விலைகளை தோற்றுவிப்பதனால், விவசாயிகளுக்கு குறைந்த வருமானமே கிடைக்கிறது.** ஒரே காலப்பகுதியில் ஒரே விதமான பயிரை அதிகளவில் பயிற்செய்வதைக் கட்டுப்படுத்துவதன் மீது கவனம்செலுத்துவதன் மூலம், இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும். இது சம்பந்தமாக உற்பத்தி, சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவுரைகள்/வழிகாட்டல்கள் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக உபாயமொன்றை ஆராய வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது. கிடைக்கக்கூடிய தகவல்கள் மற்றும் பாரியளவு தரவுப் பகுப்பாய்வுகளை பயன்படுத்துகின்ற தகவல்களைப் பகிர்ந்தளிக்கும் பொறிமுறையை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு காலத்துக்கேற்ற மற்றும் பொருத்தமான தகவல்களை வழங்குவதற்கு ஏதுவான விதத்தில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் பதிவிகுறிக்கப்பட்ட ஒரு உதவி நிலையம் அமைத்துக் கொடுக்கப்படலாம். மேலும், புறக்கோட்டை மற்றும் தம்புள்ள சிறப்புப் பொருளாதார நிலையங்களில் நியாயமான வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் சந்தை இடைத்தடங்கல் சந்தைகளுக்கிடையிலான சமச்சீரற்ற விலைகள் ஆகியவற்றைக் குறைக்கமுடியும்.

#### தொழிற்படையும் தொழில்நிலையும்

- **தொழில் சந்தைக்கு உகந்த அபேட்சகர்களை வழங்குவதற்கு தரமான நியமங்கள் மற்றும் முறையான அங்கீகாரத்துடன் கூடிய தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வழிகள் திறக்கப்பட வேண்டும்.**

4

தேசிய பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை ஒதுக்கீடு செய்வது, எதிர்கால உழைப்பு கேள்வி துறை சம்பந்தமான சரியான நோக்குடன் செய்யப்பட வேண்டும் ஏனெனில் மட்டுப்படுத்தப்பட்ட தொழில் வாய்ப்புக்களுடன் பட்டதாரிகளை உருவாக்குவது முதியோர் மிகு சனத்தொகை முக்கிய நிகழ்வாகக் காணப்படும் நிகழ்வுக்கு சமூக பொருளாதாரப் பிரச்சனைகளை மேலும் அதிகரிக்கக்கூடும். எனினும், கட்டணம் அறவிடப்படாத தேசிய பல்கலைக்கழக முறைக்குள் நுழையமுடியாத மாணவர்களுக்கு மூன்றாம் நிலை கல்வியை அணுவழியினை வழங்கி அதை முகாமைப்படுத்துவதற்கு பொருளாதாரத்தின் சில துறைகளிலிருந்து தனியார் பல்கலைக்கழக கல்வியை விரிவுபடுத்துவதற்கு எதிர்ப்புகள் காணப்படலாம். தேர்ச்சிபெற்ற தொழிற்படையைக் கட்டியெழுப்புவதற்கு இது ஆதாரமாக அமையும்

4

- **பயன்படுத்தப்படாத கிராமிய வளங்களை உபயோகப்படுத்துவதில், தொழிலாளர் தொடர்பான பற்றாக்குறை நிவர்த்தி செய்வதற்கு தொழில் பயிற்சி நிறுவனங்கள் புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தல் இன்றியமையாததாகும்.** தனியார் துறையினருடன் இணைந்து செயற்படுவதன் மூலம் தொழில் பயிற்சி நிறுவனங்கள் தாம் வழங்கும் கற்கை நெறிகளை நவீனமயப்படுத்தி மேம்படுத்தும் அதேவேளை நிரம்பலால் உந்தப்படும் பயிற்சி மாதிரியுருக்களைத் தவிர்த்து கேள்வியால் உந்தப்படும் பயிற்சி மாதிரியுருக்களை ஊக்குவிக்கப்படுத்தும். தனியார் துறையினருடன் பலன்தரக்கூடிய விதத்தில் இணைந்து செயல்பட தொழில்பயிற்சி நிறுவனங்கள் தமக்கிடையே சீரான ஒத்துழைப்பை பேணுவது அவற்றின் கடும்போக்கை நெகிழச்செய்யவும் முக்கியமானதாக விளங்குகின்றது. மறுபக்கத்தில் மொத்த சனத்தொகையில் கிராமிய சனத்தொகையானது 80 சதவீதமாக இருப்பதோடு இது தொழிற்பயன்பாட்டின் இயலளவு நியதிகளில் பாரிய தளமொன்றினை வழங்குகின்றது. தொழிற்பயிற்சி வாய்ப்புக்கள், தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக பலன்தரக்கூடிய தொடர்பாடல் உபாயங்கள் இல்லாந்தோறுமான விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாக கிராமிய துறையை தொழில் பயிற்சி நிறுவனங்களால் அணுகி இதன் மூலமாக கிராமிய இளைஞர் சமுதாயத்தின் திறமைகளை அதிகரிக்க முடியும். இவ்வாறான உபாயங்கள் உள்நாட்டு தொழில் தேவைகளுக்காக ஒரு மனித மூலதன அடித்தளத்தை அபிவிருத்தி செய்வதற்கு உதவி செய்வதோடு அரசின் பிராந்திய அபிவிருத்திக்கான இலக்குகளை எட்டுவதற்கு நடுத்தர மற்றும் நீண்டகாலத்தில் இலாபகரமானதாகவுள்ளதாக அமையும்.

- **விடாப்பிடியான தொழில் சட்டங்கள், பாதுகாப்பற்ற பகுதிநேர வேலைகள் அமைய வேலைகள் ஆகியவற்றை ஊக்குவித்து பெரும்பாலான தொழிலுள்ளோரை முறைசாரா தொழில்களை நோக்கி இழுக்கின்றது.** நாள்முழுவதும் இயங்கும் தொழில் துறைகளுடன்கூடிய நவீன பொருளாதாரங்களில் கிடைக்கப்பெறும் வேலைகளைப் பெற்றுக்கொள்ள பழைமைவாய்ந்த சட்டக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டு உகப்பான தொழில் சந்தை உருவாக வழியமைக்கப்படுவது முக்கியமானதாகும். எனவே நெகிழ்வான வேலைநேரங்கள், பகுதி நேர வேலை, தழுவல் வேலை நேரங்கள் போன்ற ஒழுங்குகள் பிராந்தியங்கள் மற்றும் தொழில்துறை முழுவதும் அதிகாரிகளின் அங்கீகாரமில்லாமலே கிரமமான அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இது, தற்போது பொருளாதார ரீதியாக செயற்பாடின்றிக் காணப்படுகின்ற 65 சதவீதத்திற்கும் மேற்பட்ட மொத்தப் பெண் வீட்டுத்துறைக் குடித்தொகையினை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் ஆதரவளிக்கும். அத்தகைய மறுசீரமைப்புச் செயன்முறையின் எதிர்கால தொழில் சந்தையாகத் தோன்றுகின்ற தொழில் மன்றங்களில் இளையோர் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம் எப்போது மாற்றமடைகின்ற மிலேனிய மற்றும் அதனைத் தொடர்ந்து வருகின்ற தலைமுறையினரின் தேவைப்பாடுகளை நிறைவேற்றக்கூடியதாகவிருக்க வேண்டும்.

- **பொருளாதாரத்தில் காணப்படும் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறைக்கு தொழில்முயற்சிகள் ஊடான தொழில் சேமிப்புகள் முதலீடுகள் ஏற்ற தீர்வாகலாம்.** இயந்திர நுண்ணறிவு, எந்திர மனித மூலமான செயன்முறை தன்னியக்கம், செயற்கை நுண்ணறிவு நுட்பங்கள் மூலம் கற்றல் போன்றன ஊடாக ஏற்கனவே இருக்கின்ற வியாபாரச் செயன்முறைகளை தன்னியக்கப்படுத்தல் போன்ற புதிய முன்னெடுப்புகள் தொழிலாளர் செலவைக் குறைத்து பெறுமதிச் சங்கிலியில் உற்பத்தியை அதிகரிக்கக்கூடியன. இது இயற்கை மூலம் மீண்டும் மீண்டும் செய்யப்படாத நடவடிக்கைகளுக்கான மற்றும் மேலும் ஆக்கத்திறன் வேண்டுகின்ற நடவடிக்கைகளுக்கான பற்றாக்குறையான மனித மூலதனத்தை பிடித்து வைப்பதற்கும் வசதிப்படுத்தும். அத்தகைய உற்பத்தித்திறன் வழிமுறைகளை ஊக்குவிக்கும் பொருட்டு அத்தகையத் தீர்வுகளை உருவாக்கிப் பயன்படுத்துகின்ற உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கு மானியக் கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் அதையொத்த

தன்மையிலான வெளிநாட்டு முதலீடுகளுக்கு வரிச் சலுகைகளை நிறுவுதல் என்பதன் மூலம் அரசாங்கம் தலையீடு செய்யலாம்.

- **வெளிநாட்டுத் தொழில்நிலையில் வீழ்ச்சியானது தொழிலாளர் பணவனுப்பல்களில் வீழ்ச்சியொன்றிற்கு இட்டுச்செல்லக்கூடியது.** வெளிநாட்டு நடைமுறைக் கணக்கினை மோசமாகக் பாதிக்கக்கூடியது என்பதுடன் தேர்ச்சிபெற்ற வகைகளை புறப்படுகைகள் ஊடாக சீர்செய்யப்படவுள்ளது. கல்வி முறைமை மற்றும் தொழில்பயிற்சி நிறுவனங்களின் மேற்குறிப்பிடப்பட்ட மறுசீரமைப்புகளும் புதிய அணுகுமுறையும் தனியார் துறையின் தொழில்துறை நிபுணத்துவத்துடன் ஒன்றிணைந்து சர்வதேச ரீதியாக தொழிலுக்கு அமர்த்தப்படுவதற்கு ஆயத்தமாக மற்றும் தகைமைபெற்று விளங்குகின்ற தேர்ச்சிபெற்ற தொழிற்படையொன்றினை கட்டியெழுப்புவதற்கு துணையளிக்கக்கூடியது. இது நேரடி நன்மையாக தொழிலாளர் பணவனுப்பல்களில் அதிகரிப்புக்கு இட்டுச்செல்லுகின்ற அதேவேளை நேரடியற்ற ரீதியில் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும். இதனால், தேர்ச்சிபெற்ற தொழிலாளர் புறப்படுகை ஊக்குவிக்கும் அதேவேளை தேர்ச்சிபெறாத வகை புறப்படுகைகளை ஊக்கமிழக்கச் செய்வது மேலும் வலுப்படுத்தப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.